மெட்ரோ ரெயில் நிறுவனம் பெயரில் வேலைவாய்ப்பு மோசடி

# சென்னையில் 2 பேர் கைது

சென்னை, ஜூலை.17– சென்னை மெட்ரோ ரெயில் நிறுவனத்தின் பெயரில் போலியான இணையதளம் உருவாக்கி, அதில் விளம்பரம் கொடுத்து வேலை வாய்ப்பு மோசடியில் ஈடுபட்டதாக 2 வாலிபர்கள் கைது செய்யப்பட்டனர்.



பாலு



பிரசாந்த்

## வேலைவாய்ப்பு மோசடி

சென்னை மெட்ரோ ரெயில் நிறுவனத்தின் பொதுமேலாளர், போலீஸ் கமிஷனர் ஏ.கே. விஸ்வநாதனிடம் பரபரப்பு புகார் மனு ஒன்றை கொடுத்தார். அந்த புகார் மனுவில் கூறியிருப்பதாவது:–

சென்னை மெட்ரோ ரெயில் நிறுவனத்தின் இணையதள முகவரி www.chennaimetrorail.org என்பதாகும். ஆனால் சில நபர்கள் மெட்ரோ ரெயில் நிறுவனம் பெயரில் www.cmrlco.org என்ற போலியான இணையதளத்தை உருவாக்கி, அதில் மெட்ரோ ரெயில் நிறுவனத்தில் வேலைவாய்ப்பு இருப்பதாக போலியான விளம்பரங்களை வெளியிட்டுள்ளனர். இதை நம்பி ஏராளமான இளைஞர்கள் மெட்ரோ ரெயில் நிறுவனத்துக்கு வேலைகேட்டு தகவல் அனுப்புகிறார்கள். இது ஒரு மோசடி நடவடிக்கை ஆகும். இந்த நடவடிக்கையில் ஈடுபட்டுள்ள நபரை கண்டுபிடித்து சட்டப்படி நடவடிக்கை எடுக்கவேண்டும்.

இவ்வாறு புகார் மனுவில் தெரிவிக்கப்பட்டு இருந்தது.

## கேரளா வாலிபர் கைது

இந்த புகார் மனு மீது உரிய நடவடிக்கை எடுக்கும்படி சென்னை மத்திய குற்றப்பிரிவின் சைபர் கிரைம் போலீசாருக்கு, போலீஸ் கமிஷனர் ஏ.கே.விஸ்வநாதன் உத்தரவிட்டார். துணை கமிஷனர் செந்தில்குமார், உதவி கமிஷனர் வேல்முருகன் ஆகியோர் மேற்பார்வையில் சைபர் கிரைம் இன்ஸ்பெக்டர் அன்பரசன் வழக்குப்பதிவு செய்து விசாரித்தார்.

மெட்ரோ ரெயில் நிறுவனத்தின் பெயரில் போலியான இணையதளம் உருவாக்கி, அதில் வேலைவாய்ப்பு விளம்பரங்களை வெளியிட்டதாக கேரளா மாநிலம் மலப்புரம் மாவட்டம் திருரை சேர்ந்த ஸ்ரீஜித் (வயது 34) என்ற வாலிபரை கடந்த 7–ந் தேதி போலீசார் கைது செய்தனர்.

பட்டதாரி வாலிபரான ஸ்ரீஜித் இந்த நூதன வேலை வாய்ப்பு மோசடிக்கு மூளையாக செயல்பட்டவர் ஆவார். அவரை 4 நாட்கள் சைபர் கிரைம் போலீசார் காவலில் எடுத்து விசாரணை நடத்தினர். அந்த விசாரணை முடிவில் மேலும் சிலருக்கு இந்த வழக்கில் தொடர்பு இருப்பது தெரியவந்தது.

## சென்னையில் 2 பேர் கைது

அவர்களை பற்றி விசாரணை மேற்கொள்ளப்பட்டது. அதன்பேரில் நேற்று இந்த வழக்கில் மெட்ரோ ரெயில் நிறுவனத்தின் பெயரில் போலி இணையதளத்தை உருவாக்குவதற்கு உறுதுணையாக செயல்பட்ட சென்னை மேற்கு மாம்பலம் ஜெயசங்கர் தெருவைச் சேர்ந்த பாலு (38) என்பவரும், எர்ணாவூர் விம்கோ நகரை சேர்ந்த பிரசாந்த் (32) என்பவரும் கைது செய்யப்பட்டனர். அவர்கள் இருவரும் கோர்ட்டில் ஆஜர் படுத்தப்பட்டு நீதிமன்ற காவலில் சிறையில் அடைக்கப்பட்டனர்.

மெட்ரோ ரெயில் நிறுவனத்தின் பெயரில் போலியாக உருவாக்கப்பட்ட இணையதளம் முடக்கப்பட்டதாக போலீசார் தெரிவித்தனர். தொடர்ந்து விசாரணை நடக்கிறது.